**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 134/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | திரு. சின்னதுரை |
| Father's Name/Husband Name: | திரு. தங்கராசு |
| Village : | பெண்ணகோணம் |
| Taluk : | குன்னம் |
| Age : | 55 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–98வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெண்ணகோணம் ஊராட்சி மன்ற துணைத்தலைவராக பணிபுரிகிறேன். ப.சா.6 மகேந்திரன் என்பவரை தெரியும். அ.சா.1 செல்வம் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2017ம் வருடம் நானும், சாட்சி மகேந்திரனும் மலைச்சான் குட்டையில் அருகே சென்று கொண்டிருந்தபோது, போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக் கொண்டிருந்தனர். அவ்வாறு எழுதியதில் நானும், சாட்சி மகேந்திரனும் சாட்சி கையொப்பம் போட்டோம். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்ப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் வைத்து தான் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக நேரடியாக எனக்கு

எதுவும் தெரியாது என்றால் சரிதான். பெண்ணகோணத்தில் ஊராட்சி மன்ற தலைவராக இருப்பதினால் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியுள்ள விவரம் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அ.சா.1 எனது உறவினர் என்பதற்காக நான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd-xxxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.